# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 03.08.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 768/SCIC/2024**

திரு.நாஞ்சில் C.மனோகரன் - புகார்தாரர்
PIONEER QUEENS PARK
BLOCK-B, GB-3, GROUND FLOOR
வேளச்சேரி பிரதான சாலை
சென்னை-600 073.
Phone:97899 34044.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **23.09.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 01.11.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 23.01.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 23/09/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை-8 அவர்களுக்கு அனுப்பி, அதில் “மாடம்பாக்கம் கிராமம், எண்.1,பதுவஞ்சேரி மெயின் ரோடு, மாடம்பாக்கம், சென்னை-126-ல் இயங்கி வரும் Annai Arul Public School - தொடர்பாக - கட்டிட அனுமதி வழங்கப்பட்ட உரிமையாளர் பெயர் பற்றிய விவரங்கள்” என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.நாஞ்சில் C.மனோகரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி/செல்வி.அ.ஜெயந்தா சொர்ண மணி, துணைத் திட்ட அமைப்பாளர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 23/09/2024 நாளிட்ட மனுவின் வாயிலாக Annai Arul Public School - தொடர்பாக - கட்டிட அனுமதி வழங்கப்பட்ட உரிமையாளர் பெயர் உள்ளிட்ட விவரங்களைக் கோரியுள்ளதாகத் தெரிய வருகிறது. பொதுத் தகவல் அலுவலர், 15/11/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகவும், அதில் தமது அலுவலக ஆவணங்களின்படி, அப்பள்ளிக்கு எவ்வித கட்டிட அனுமதியும் அளிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், மேற்சொன்ன 15/11/2024 தேதியிட்ட தகவல் தனக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், 07/02/2025 தேதியிட்டு மீண்டும் கடிதம் அனுப்பியதாகவும், அக்கடிதத்தில் 15/11/2024 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, எவ்வித கட்டிட அனுமதியும் அளிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், மனுதாரரின் பிரிவு 19(1)-ன் கீழான 01/11/2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை பொதுத் தகவல் அலுவலர், மாடம்பாக்கம் பேரூராட்சிக்கு 07/02/2025 தேதியிட்டு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தனக்கு, மேற்சொன்ன 07/02/2025 தேதியிட்ட கடிதத்தின் நகல் கிடைக்கப் பெற்றது என்றார். மேலும், பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன மாடம்பாக்கம் பேரூராட்சியினர் அளித்த கட்டிட அனுமதியின் நகலினை ஆணையத்தின் முன் காண்பித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ துணைத் திட்ட அமைப்பாளர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்கள் மேற்குறிப்பிட்ட கட்டிட அனுமதியின் நகல் மற்றும் 15/11/2024 தேதியிட்ட கடிதம் மற்றும் 07/02/2025 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாடம்பாக்கம் பேரூராட்சி-க்கு அனுப்பிய கடிதத்தின் நகல் ஆகியவற்றினை 31/08/2026-க்குள் மனுதாரருக்கு விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர், புகார் மனு தாக்கல் செய்திருந்தாலும், தகவல்கள் வேண்டுமென்று மனுதாரர் விருப்பம் தெரிவித்த காரணத்தினால், ஆணையம் மேற்கண்ட உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. விசாரணையின் போது மனுதாரர், தான் மேற்சொன்ன மாடம்பாக்கம் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் வசித்து வருவதாகவும், மேற்சொன்ன பள்ளியின் கட்டுமானப் பணிகளால், நீராதாரம் அப்பள்ளிக்கு திருப்பிவிடப்படுவதன் காரணமாக, தான் உள்ளிட்ட அப்பகுதியினர் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர்/ துணைத் திட்ட அமைப்பாளர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்கள், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன்படி உரிய காலவரையறைக்குள் மனுதாரருக்கு தகவல் வழங்காமைக்கு, ஆணையம் எச்சரிக்கிறது. இனி வருங்காலங்களில், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன்படி, மனுதாரருக்கு உரிய காலவரையறையான 30 நாட்களுக்குள் தகவல் வழங்கப்படவில்லையெனில், அச்சட்டத்தின் கீழான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 768/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

**புகார்தாரர்**

திரு.நாஞ்சில் C.மனோகரன்
PIONEER QUEENS PARK
BLOCK-B, GB-3, GROUND FLOOR
வேளச்சேரி பிரதான சாலை
சென்னை-600 073.
Phone: 97899 34044.

RG/Sr.PC